பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

12 01 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை விரைவில் உருவாக்க இளையோர் சக்தி உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. அரசியல் சாசனத்தின் அடிப்படை கடமைகளை செய்ய சொல்வதை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் குறை கூறுவது ஏற்புடையதல்ல என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

3. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படுவதை தடுத்திட தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

4. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி போட்டியிடப் போவதில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை அறிவித்துள்ளார்.

5. இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அயர்லாந்து வெற்றிபெற 371 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை விரைவில் உருவாக்க இளையோர் சக்தி உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ‘வளர்ச்சியடைந்த இந்தியா’ இளையோர் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

நாட்டின் இளையோர் சக்தி பெரிய அளவில் மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தற்போது மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் இளையோர் தீர்வு காண்பார்கள் என்று அவர் கூறினார்.

பல்வேறு துறைகளில் இந்தியா சாதனைகள் படைத்து வருவதாகவும் இதற்கு இளையோரின் திறனே காரணம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையின் பிடியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>>><<<<<<

தேசிய கீதத்திற்கு உரிய மரியாதையை அளிக்க வலியுறுத்துவதையும், அரசியல் சாசனத்தின் அடிப்படை கடமைகளை செய்ய சொல்வதையும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் குறை கூறுவது ஏற்புடையதல்ல என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக ஆளுநர் மாளிகை சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், அரசியல் சாசனத்தின் அடிப்படை கடமைகளை செய்யச் சொல்வதை அபத்தமானது, சிறுபிள்ளைத்தனமானது என்று முதலமைச்சர் கூறுவது தவறானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேச ஒற்றுமை மற்றும் அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளாத மற்றும் மதிக்காத தலைவராக திரு. மு.க.ஸ்டாலின் உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டாட்சி தத்துவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஆணவத்துடன் திரு. மு.க.ஸ்டாலின் செயல்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று முதலமைச்சர் செயல்படுவது நல்லதல்ல என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படுவதை தடுத்திட தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க,ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ராமேஸ்வரத்தை சேர்ந்த 8 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் இன்று சிறைபிடிக்கப்பட்டுள்ளதை அவர் அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்ககப்பட்டுள்ள அனைத்து மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடி படகுகளை விடுவிக்க உறுதியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி போட்டியிடப்பட போவதில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசியல் சாசனத்திற்கு நேர்எதிராக ஆளும் திமுக அரசு செயல்பட்டு வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலை இலக்காக கொண்டே தேசிய ஜனநாயக கூட்டணி செயல்பட்டு வருவதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சூழ்நிலையில், ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் கால்நடைகளைப் போல பொதுமக்களை மீண்டும் அடைத்து வைக்க திமுகவை அனுமதிக்க தேசிய ஜனநாயக கூடடணி விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, இந்த இடைத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை தேசிய ஜனநாயக கூட்டணி முடிவு செய்திருப்பதாக திரு. அண்ணாமலை அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

இஸ்ரோ பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தவுள்ளதாக அதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. நாராயணன் கூறியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், சுவாமிதோப்பில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - நாராயணன் 66 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

விண்ணில் செலுத்தப்பட்ட இரண்டு செயற்கைக் கோள்களை இணைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக இஸ்ரோ கூறியுள்ளது.

இன்று காலையும் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும், தரவுகளை கூடுதலாக ஆராய்ந்த பின்னர் இந்த முயற்சியை மீண்டும் இஸ்ரோ மேற்கொள்ளவுள்ளதாகவும் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு. த.வி. வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - த.வி. வெங்கடேஸ்வரன் 65 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர் ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 44 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சியில் கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையம், அறிவுசார் மையம், நூலகம் மற்றும் நகராட்சி தொடக்கப் பள்ளி கட்டிடங்களை மாநில அமைச்சர் திரு. கே.என். நேரு இன்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் இளையோர் எழுச்சி தின மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நாடகம் நடத்தப்பட்டு வருகிறது.

>>>>>><<<<<<

நாகை கடற்கரையில் அரியவகை கடல் ஆமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் மணல்சிற்ப கண்காட்சி நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அயர்லாந்து வெற்றிபெற 371 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ராஜ்கோட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா தொடக்க முதலே அதிரடியாக ஆடிய நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 370 ரன் எடுத்தது.

**Jemimah Rodrigues** அதிரடியாக 92 பந்துகளில் 102 ரன் குவித்தார்.

371 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு தற்போது பேட் செய்துவரும் அயர்லாந்து, சற்றுமுன்வரை 49 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 245 ரன் எடுத்துள்ளது.

>>>>>><<<<<<

ஆசிய கோப்பை பீச் கால்பந்து போட்டியில் பங்கேற்பதற்கான 25 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி தாய்லாந்தில் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<<

நடப்பாண்டுக்கான ஐபிஎல் கிரிக்கெட் போட்டி மார்ச் மாதம் 23ஆம் தேதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>END<<<<<<